www.tamilarangam.net

# ஈழமுழக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## இரத்த சாட்சியங்களின் அடிச்சுவட்டில்....

''நமது தந்தையர்
நாட்டு மண்மீது
சிவப்பு இரத்தத்தைச்
சிதற வைத்தவர்களுக்குத்
தண்டனை அளியுங்கள்.''

ஈழத்து மக்களின் வீரமிக்க விடுதலைப் போராட்டத்தைக் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகள் மூலமும், கோரத்தனமான படுகொலைகள் மூலமும் பாசிஸ்டுகள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திர விடியலுக்காகச் சுடர்முகம் தூக்கியுள்ள மக்களை அடக்குமுறை தர்பார் மூலம்தான் ஒடுக்கும் தேசங்களிலுள்ள துப்பாக்கித் துரைத்தனம் எதிர்கொள்கிறது. சர்வதேசக் கொலைக் கும்பலான ஏகாதிபத்திய அமெரிக்காவின் ஏவல் நாயான சிறீலங்கா பாசிச அரசும் தனது எஜமானத்துவத்தின் வழிமுறையில்தான் வன்முறையைப் போராடும் மக்கள்மீது ஏவிவிடுகிறது.

நமது புனித பூமியில் இரத்தக்களரிமிக்க யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதன் மூலம் பாசிஸ்டுகள் தேசப்பரப்புக்களைக் குருதியில் மூழ்கடித்துள்ளனர். ஈவிரக்கமற்ற இக்

www.tamilarangam.net



கொலைஞர்கள் ஈழமக்கள் சரணடைய **வேண்டும் என்றும்**, போராடும் **அமைப்புகள்** உயரே தூக்கிய துப்பாக்கி முனைகளைக் கீழே புதிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

எவ்வித குற்றமுமற்ற, நிராயுத பாணிகளான மக்களைப் படுகொலை செய்து தமது கரங்களைக் கறைப்படுத்திக் கொண்ட கொடிய பகைவர்கள் பிரகாசமான இலட்சியங்களுக்காகப் போராடும் புரட்சிவாதிகளைப் ''பயங்கரவாதிகள்'' என்று கூச்ச நாச்சமின்றிக் கூறிக்கொள்கிறார்கள்.

சிறீலங்காவின் தரகு முதலாளித்துவ, சிங்கள நிலப் பிரபுத்துவ ஆளும் வர்க்கங்கள் இலங்கைத் தீவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவகாலனித்துவச் சுரண்டலுக்கு இரையாக்கி வருகின்றன.

அமெரிக்காவினதும், அதன் ''நேட்டோ'' இராணுவ ஆக்கிரமிப்புக் கூட்டணி நாடுகளினதும் கெடுபிடி யுத்தத்துக்கு இலங்கைத் தீவு தாவுத் தளமாகி வருகிறது.

தமது சுரண்டல் நலன்களுக்காக, அழுகிவரும் உலக முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்க, மனித குலத்தையே மீள முடியாத யுத்தப் பேரழிவுக்கு இட்டுச்செல்ல அமெரிக்க ஏகாதிபத்தியம் தருணம் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறது.

ஆக்கிரமிப்பு யுத்தத் தயாரிப்புக்கு இலங்கைத்தீவில் தளம் கொடுத்திருக்கும் சிறீலங்கா பிற்போக்கு ஆளும் கும்பல்தான் இலங்கையின் பாதுகாப்பைப் பற்றி உரத்துக் கூச்சலிடுகிறது. ''இந்தியா படை எடுக்கும் ஜாக்கிரதை'' என்ற பூச்சாண்டியையும் கிளப்பி விட்டிருக்கிறது.

''தாய்நாட்டைப் பாதுகாப்பது'' என்ற போர்வையில் தான் ஏகாதிபத்தியங்கள் கொள்ளைக்கார யுத்தங்களை நடத்தின என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அமெரிக்காவின் ஜீவாதார நலனைப் பாதுகாப்பது என்னும் மூடுதிரையின் பின்னால்தான் மூன்றாம் உலக யுத்தத்துக்கான தயாரிப்பில் ஏகாதிபத்திய ஆளும் வட்டாரம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

சோவியத் யூனியனால் ஆபத்து என்ற பூச்சாண்டி காட்டித்தான் வளர்ந்தும், வலுப்பெற்றும் வரும் உலக சோசலிச முகாமைப் பலவீனமாக்கும் பிரச்சாரங்களில் ஏகாதிபத்தியங்கள் இறங்கியுள்ளன. அணு ஆயுதங்களைப் பெருமளவில் குவிக்கின்றன.



இவ்வாறுதான் **சிறீலங்கா பாசிஸ்டுக்களும் இந்தியாவால் ஆபத்து என்ற மூடுதிரையின் பின் ஏகாதிபத்தியத்தை இலங்கைத்தீவில் நுழைய இடமளித்துள்ளனர்.** ''பயங்கரவாதிகளைச் சங்காரம் செய்கிறோம்'' என்ற போர்வையில் இஸ்ரேலிய சியோனிஸ்டுகளுடன் கூடிக் குலவுகின்றனர்.

தேசிய விடுதலைப் போராட்டங்கள் அனைத்துமே அமெரிக்காவின் கண்களுக்குப் பயங்கரவாதப் போராட்டங்களாகவே தெரிகின்றன. உலக மக்களின் கொடிய பகைவனுக்கு அவை அப்படித்தான் தெரியவும் முடியும்.

சிறீலங்கா பாசிஸ்டுக்களுக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம் பயங்கரவாதப்போராட்டமாகவே தெரிய முடியும். அப்படித் தெரிவதால் தான் எமது போராட்டம் புரட்சிகரமானது என்பது உண்மையுமாகிறது.

மகத்தான இலட்சியங்களுக்காகப் போராடும் ஈழ மக்கள், எவனுக்கும் அடிமையாக வாழ்வதை விட, ஒடுக்கு முறையாளர்களை எதிர்த்து இறுதிவரை போராடுவதையே விரும்புகிறார்கள்.

இத்தகைய புரட்சிகரமான உறுதியின் அடித்தளம்தான் ஏகாதிபத்திய பின் பலம் கொண்ட தேசப் பகைவர்களை எதிர்த்து நிற்கும் மூலமாயுள்ளது.

உலக சோசலிச நாடுகளினதும், ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமினதும் காத்திரமான பின் பலத்துடன் எமது புனிதமிக்க வெகு ஜன ஆயுதப் போராட்டத்தை இறுதி வெற்றி வரை முன்னெடுக்கும் வலிமை எமது தேசத்தின் ஆயிரமாயிரம் புதல்வர்களுக்கும், புதல்வியருக்கும் உண்டு.

எமது மகத்தான விடுதலை யுத்தத்தில் முன் சென்ற புரட்சியாளர்கள் சிலர் பகைவர்களால் வேட்டையாடப் பட்டிருக்கிறார்கள். கொலைப் பட்டாளங்களின் கரங்களில் சிக்காது இன்னுயிரை இழந்த தேசபக்தர்களும் உண்டு.

ஆனாலும் புரட்சியாளர்களை அடிமை இருட்டில் ஆழப் புதைத்து விட்டதாகப் பாசிச மிருகங்கள் குதூகலிக்க முடியாது.

எமது பாச பூமியின் விமோசன விடியலுக்குச் சுடர் முகம் தூக்கிய புரட்சியாளர்கள் பகைவர்களால் கொல்லப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போதும் எமது முன்னோக்கிய பாதையில் **இரத்த சாட்சியங்களாகப்** பிரகவிக்கிறார்கள்.

அந்த இரத்த சாட்சியங்களின் அடிச்சுவட்டில்... அவர்கள் எத்தகைய இலட்சியங்களுக்காக, எந்தக் கோட்பாடுகளின் வெற்றிக்காகப் போராடினார்களோ அந்த இலட்சியங்கள், கோட்பாடுகள் வெல்லும் வரை நாங்கள் போராட்டத்தை ஓய்வின்றித் தொடர்வோம்.

**அண்மையில் சிறீலங்கா மண்ணில் விடுதலைக்கான புரட்சிப் பணியில்** தோழர் **இரட்னசபாபதி பரிபூரணன் மக்களுக்காக மரண மடைந்தார்.**

பாட்டாளி வர்க்கப் புரட்சியாளரான தோழர் பரிபூரணன் மலையகப் பாட்டாளிகள் மத்தியில் எமது ஸ்தாபனத்தின் அரசியல் வேலையின் போது இணைந்து பங்கு கொண்ட நினைவுகளை நெஞ்சில் நிறுத்துகிறோம். ஈழ விடுதலைப் போராட்டத்தில் தேசிய ஜனநாயக சக்திகளது ஐக்கியத்தை நடைமுறையில் உணர்ந்து கொண்டவர்.

வேறு ஒரு அமைப்பைச் சார்ந்து நின்ற போதும், மலையகப் பாட்டாளிகள் மத்தியிலான எமது வேலையில் அவர் இணைந்து செயல்பட்டதன் மூலம் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளனுக்கு உரிய ஒழுக்கத்தைக் காட்டினார்.

தோழர் **பரிபூரணனுக்குச் சிகப்பு வணக்கம்** (Red Salute) செலுத்துகிறோம்.

இரத்த சாட்சியங்களின் நினைவுகளை என்றென்றைக்கும் எமது மக்கள் போற்றுவார்கள். அவர்களது புத்துலகக் கனவை நிஜமாக்கியும் தீருவர்.

''யாருடைய
ஆணையின் பேரில்
இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்தத் துரோகிகளுக்குத்
தண்டனை வழங்குங்கள்''

*இரத்த சாட்சியங்கள் நிடுழி வாழ்க!*
*மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்த*
*ஈழம் மலர்க.*

★



# சிந்தியாவுக்குச் சில குறிப்புகள்.

சிந்தியா !
நீண்ட கடல்
மலைகள்
காடுகள்
நம்மை இன்று பிரிக்கலாம்.

நம் எண்ணங்களை
இவை

பிரிக்கமுயன்றால்
பாவம்
அவை தோற்றுப்
போய்விடுமே !

நம் குருதியில் கலந்துவிட்ட
விடுதலை வேட்கை முன்—
நம் உணர்வுகளுடன்
பரவிவிட்ட
தேசத்தின் விடுதலையின்
முன்—
நம் தேசத்தின் மக்களைக்
காக்க
நாம் உறுதியுடன்
ஏந்திவிட்ட
பதாகைகளின் முன்—
பிரிவுகள்—
நீண்ட தூரங்கள்—
அவையெல்லாம்
நிச்சயம்
தோற்றுப் போய்விடும் !

சிந்தியா !
உனக்கு நினைவிருக்கிறதா ?
அந்தி வெயிலின் கதகதப்பில்
அலைகள் வானைத் தொடும்
முயற்சியில்
துள்ளி விளையாடும்
இனிய பொழுதுகளி
லொன்றில்
நான்
உன்னோடு குறும்புகள்
செய்ய
நீ
பொய்க் கோபம் கொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என் கரங்களை தட்டிவிட்டு
ஓடிமறைந்த நினைவுகள்.
ஓ!
சிந்தியா.
இன்னமும்
பசுமையாய் உள்ளதே!

சிந்தியா,
என்
கடமைகள் முடியும்போது
உன்னிடம்
நான் வருவேன்.

மெல்லிய இரவின்
பனிமூட்டங்களிடையே
உன் கரங்களோடு
கரம்கோர்த்து
ஈழத்தின் தெருக்களில்
ஆழமாய்க்கால்
பதித்துச்செல்ல
நான் வருவேன்!

சிந்தியா!
நாட்கள் நெருங்குகின்றன.
இன்னும்
சில இரவுகளுக்கிடையே
எதுவும் நிகழலாம்!
அன்பே!
மரணம்
நம்மைப் பிரிக்கலாம்.

சிந்தியா!
நான்
உறுதியாக நம்புகிறேன்
என்
மரணத்தின் பின்னால்
அந்தக்
கோர இரவின்
அமைதிக்குப் பின்னால்
நீ
என் பணிகளைத்
தொடர்வாய்
நம்புகிறேன் என்னவளே!
நம்புகிறேன்!
ஈழவிடுதலைத் தீயில்
அக்கினிக் குழம்பாய்
நீ
பிரகவிப்பாய்!

சிந்தியா!
என்னவளே!
நான்
உயிருடன் இல்லா
விட்டாலென்ன?
நீ சுவாசிக்கும் காற்றோடு!
உன் எண்ணங்கள்
அசைவுகள்
ஒவ்வொன்றோடும்!
உன் நினைவுகளோடு!
என்றும் உன்னோடு
என் அன்பே!
என்றும் உன்னோடு கலந்து
உன் விடுதலை வேட்கையின்
உரமாய்
உன் துணையாய்
நான்
உன் கூடவே இருப்பேன்!

செழியன்

# ஏகாதிபத்திய ஏவல்நாயின் சோவியத் எதிர்ப்பு!

சோவியத் யூனியனின் "ஏரோபுளோட்" விமான சேவை அதிகாரிகளும், பல்கேரியா நாட்டின் "பல்கன்" விமானசேவை நிறுவனத்தின் அதிகாரிகளும் சிறீலங்காவிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஏகாதிபத்திய அமெரிக்காவின் அடிவருடியான சிறீலங்கா நவபாசிச அரசு இவர்களை உடன் வெளியேறுமாறு திடீர் உத்தரவு பிறப்பித்தது.

சோவியத் யூனியன் மீதும், ஏனைய சோசலிச நாடுகள் மீதும் ஏகாதிபத்திய அமெரிக்கா விஷமத்தனமான பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

தமது எஜமான விசுவாசத்தைக் காட்டுவதற்காகச் சிறீலங்கா அரசு சோவியத்மீதும், பல்கேரியா மீதும் பாய்ந்துள்ளது. இந்த நாடுகளின் அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தி உள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதையும், அவர்களுக்கெதிரான இன ஒதுக்கலை தடுப்பதையும் நோக்கமாகக் கொண்ட மனித உரிமைகள் பற்றிய உபகுழுவின் 35-வது கூட்டத்தொடர் நடைபெற்றது.

இக் கூட்டத்தொடரில் இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இத்தீர்மானம் கொண்டு வரப்படுவதைத் தடுக்க சிறீலங்கா அரசு பெரும் முயற்சி எடுத்துக் கொண்டது. வழமைக்கு மாறாக ஜயந்தா தனபாலாவின் தலைமையில் 5 பேர் கொண்ட குழுவைப் பார்வையாளராகவும் அனுப்பி வைத்தது. இவர்கள் பலநாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்துச் சிறீலங்காவின் இனவெறிக் கொள்கைக்கு ஆதரவு திரட்ட முயன்றனர்.

ஆனால் சிறீலங்கா அரசால் ஈழமக்கள் படுகொலைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படுவதைத் தடுக்க முடியவில்லை. அங்கு வந்திருந்த பிரதிநிதிகள் பலருக்குச் சிறீலங்காவின் குற்றத்தனமும், அதன் பேரினவாதக் கொள்கையும் தெரிந்தே இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது சிறீலங்கா அரசுக்கு உதவிவரும் சீனாவும், ருமேனியாவும் வரிந்துகட்டிக் கொண்டு நின்று எதிர்த்தன. சிறீலங்கா அரசின் இனவெறிக் கொள்கையை நியாயப்படுத்தின.

**சோவியத் யூனியனும், இந்தியாவும்** தீர்மானத்துக்கு ஆதரவாக முன்னின்று வாக்களித்தன.

இதனாலும் சோவியத் யூனியன் மீது சிறீலங்கா அரசுக்குக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

''குற்றமுள்ள மனது குறுகுறுக்கும்'' என்று ஒரு முதுமொழி உண்டு. படுபயங்கரமான குற்றவாளியான சிறீலங்கா அரசு முற்போக்குச் சக்திகளைக் கண்டு அஞ்சுகிறது. தனது குற்றச் செயல்களை இவை கண்டுபிடித்து அம்பலப்படுத்தி விடுமோ என அச்சமடைகிறது.

சோசலிசம், ஜனநாயகம், சமாதானம் என்னும் இலட்சியங்களுக்காகப் போராடும் ஏகாதிபத்தியத்தின் எதிரிகள், தனக்கும் எதிரிகளே என ஏகாதிபத்திய ஏவல் நாயான சிறீலங்கா அரசு கருதுவதில் வியப்பென்ன ? ●

**கட்சிக்குள் நிலவும்**
**அழுகிய ஆபத்தான கோள்கைபற்றி...**

கட்சிக்குள் நடத்தும் சித்தாந்த ரீதியான போராட்டத்தின் மூலமாகச் சந்தர்ப்பவாதப் பேர்வழிகளை நீக்குவது எனும் கொள்கையும் ஒரு முழுமையான கட்சியின் வரம்புக்குள்ளேயே நிறுத்தி இரண்டு பேர்வழிகளை நாளாவட்டத்தில் [illegible] சகிப்புக் காட்டும் கொள்கையும் [illegible] ஆபத்தான கொள்கையாகும்

– தோழர் ஜே. வி. ஸ்டாலின்

# தேசிய ஜனநாயக சக்திகளை ஒன்றுதிரட்டி பொது எதிரியைத் தோற்கடிப்போம்

ஒரு வருட காலமாக பாசிஸ்ட் ஜே. ஆர். ஜயவர்த்தனாவினால் நடாத்தப்பட்டு வந்த வட்ட மேசை மாநாடு, பேச்சுவார்த்தை என்ற நாடகங்கள் முடிவுக்கு வந்துள்ளன. பிரதேச சுயாட்சி, மாவட்ட சுயாட்சி, மாகாண சுயாட்சி என்று எவ்வளவோ பசப்பு வார்த்தைகள் பேசப்பட்டு இறுதியில் பாசிஸ்ட் ஜே. ஆர். ஜயவர்த்தனா ''தான் எடுப்பதே முடிவு என்றும் அதைச் சகலரும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்'' என்றும் திமிர்த்தனமாகப் பேசியுள்ளான்.

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** ஆரம்பம் முதலே இப்பேச்சு வார்த்தையின் உண்மைச் சொரூபத்தை அடிக்கடி வெளிப்படுத்தி வந்துள்ளதுடன், இது ஜே. ஆர். ஜயவர்த்தனா தனது இராணுவ பலத்தை அதிகரிப்பதற்கும், நவீனமயப் படுத்துவதற்குமான தாமதப் படுத்தும் தந்திரோபாயமே என்றும் கூறி வந்தது. கடந்த ஒரு வருட காலப் பேச்சுவார்த்தையை நாங்கள் பார்த்தோமாயின், எந்த விதமான, உபயோககரமான அரசியல் தீர்வும் ஏற்படாமலேயே பேச்சு வார்த்தை முடியும் நிலைக்கு வந்துள்ளது. அத்துடன் இக்காலப் பகுதியில் அதி நவீன ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டுள்ளதுடன், இஸ்ரேலிய மொசாத், பிரிட்டிஷ் கூலிப் படை, அமெரிக்காவின் உதவி ஆகியவற்றைக் கொண்டு சிறீலங்கா இராணுவமும் தன்னை மேலும் நவீன உத்திகளைக் கையாளக் கூடியவகையில் தயார் படுத்திக் கொண்டுள்ளது.

இதே சமயம் ஜே. ஆர். ஜயவர்த்தனா இன்னுமொரு கருத்தையும் மறைமுகமாகவும் நேரடியாகவும் சொல்லி வருகின்றான். அதாவது இந்தியத் தேர்தல் முடிந்ததும் இந்தியப் பிரதமர் ''பயங்கரவாதிகளுக்கு'' கொடுக்கும் ஆதரவை நிறுத்தி விடுவார் என்பது போன்ற கருத்தையும் கூறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வருகிறான். ஆனால் இந்தியப் பாராளுமன்றத்திலாயினும் சரி அதற்கு வெளியிலாயினும் சரி மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி காந்தி அவர்கள் பேசும்போது "பயங்கரவாதிகளுக்கு" ஆதரவு கொடுப்பது என்பதை முழுமையாக மறுத்ததுடன், இலங்கைத்தீவில் இருக்கக் கூடிய தமிழ் பேசும் மக்கள் சிறீலங்கா அரசாலும், அதன் கூலிப் படையாலும் மிலேச்சத்தனமாகச் சுட்டுக் கொல்லப்படுவதை — அழித் தொழிக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்தும் இலங்கையில் நடக்கும் பிரச்சனையை நாம் மனிதாபிமானத்தின் அடிப்படையிலேயே பார்க்க வேண்டுமென்றும், ஒரு இனம் அழித்தொழிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் தெளிவாகக் கூறியிருந்தார்.


ஆனால் சிறீலங்கா அரசானது அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இராணுவத்தளம் உட்பட முழு ஆதரவையும் நல்கிவருவதுடன் சர்வதேச பயங்கரவாதிகளான இஸ்ரேலிய மொசாத், பிரிட்டனின் கூலிப்பட்டாளம் போன்றவற்றையும் தனது மண்ணில் நிறுத்தி வைத்துள்ளது. இது ஈழ விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க மாத்திரமல்லாமல் இந்தியாவை மிரட்டுவதற்குமான ஒரு ஏற்பாடு என்பதை இந்திய அரசு தெளிவாகவே புரிந்துகொண்டிருக்கும் என்றே நம்புகின்றோம். பாகிஸ்தான், சீனா, பங்களா தேஷ், நேபாளம் போன்ற நாடுகளைத் தனது கைப் பொம்மையாக்கி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், சிறீலங்காவையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் இந்தியாவை அச்சுறுத்த முனைகிறது. இதற்குத் தரகு முதலாளித்துவ, சிங்கள நிலப்பிரபுத்துவ அரசின் பிரதிநிதியான ஜே. ஆர் ஜயவர்த்தனாவும் அவனது அரசாங்கமும் முண்டு கொடுத்து வருகிறார்கள். இதன் மூலம் இந்தியாவிற்கு மாத்திரமல்லாமல் இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்கே பெரும் ஆபத்து வந்துள்ளது. இதை மூடி மறைகின்ற முயற்சியாகவே ஜே. ஆர். ஜயவர்த்தனாவும், அவனது அமைச்சரவைக் கூட்டாளிகளும் இந்தியா மீது அவதூறுகளையும், தப்பபிப்பிராயங்களையும் சர்வ தேச ரீதியாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

இதுவரை காலமும் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்ட தமிழர் கூட்டணியானாலும் சரி, "நாங்களும் மாக்சிஸ்டுகள்" என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்ட குழுக்களானாலும் சரி எமது போராட்டமானது வெறுமனே சிறீலங்கா அரசுக்கு எதிரான போராட்டம் மாத்திரமல்ல ஏகாதிபத்தியத்



**"உலக சோசலிச முகாமும் ஜனநாயக சக்திகளும் தான் உறுதுணையாக இருக்க முடியும்"**

துக்கு எதிரான போராட்டமும் கூட என்பதை உணர்ந்திருப்பார்கள். வெறும் **கெரில்லாப் போராட்டத்தை மக்கள் போராட்டம் என்று கூறுபவர்களும்** சரி மக்களைப் பார்வையாளர்களாக மாத்திரமல்லாமல் விடுதலைப் போராட்டத்தில் பங்காளிகள் ஆக மாற்றுவதற்கு நாம் முன்னெடுத்த சிறு சிறு போராட்டங்களைக் கொச்சைப்படுத்தி, கிண்டல் செய்த குழுக்களாயினும் சரி மக்கள் போராட்டத்தின் அவசியத்தையும் அவர்களை அணி திரட்டி அமைப்பு ரீதியாகப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறோம். சிறீலங்கா நவபாசிசத்திற்கும் அதன் எஜமானத்துவமான ஏகாதிபத்தியத்திற்கு மெதிரான எமது போராட்டத்துக்கு முற்போக்கு ஜனநாயக சக்திகளும் **உலக சோசலிச முகாமும் தான் உறுதுணையாக இருக்க முடியும்** என்பதையும் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.




எமது எதிரி தற்காலிகமாக வேணும் இன்று மிகவும் பலமாக உள்ளான், இவனுக் கெதிராக நாம் குழுக் குழுவாகப் பிரிந்துநின்று போராடுவது என்பது எமது மக்களின் அழிவிற்கே இட்டுச் செல்லும் என்பதை நாம் உணர வேண்டும். எனவே குறைந்தது ஈழம் என்ற ஒரே அடிப்படையிலாவது இயக்கங்கள் யாவும் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வேண்டுகோளாகும். இது எமது வேண்டுகோள் மாத்திரமல்ல; பரந்து பட்ட ஈழ மக்களின் வேண்டுகோளும் இதுவே. ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியானது ஈழப் புரட்சியமைப்பு, தமிழீழ விடுதலை இயக்கம் போன்ற இயக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கங்களுடன் இணைந்து ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் போன்றவற்றுடன் பேச்சு வார்த்தை நடாத்தவும் இந்த ஐக்கிய முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. ஏனைய குழுக்களுடன் பேசுவது சம்பந்தமாகவும் ஆலோசித்து வருகிறது. எனவே சகல இயக்கங்களும் குறைந்த பட்ச அடிப்படையிலாவது இணைய வேண்டுமென்பதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது மிகவும் உறுதியாய் உள்ளது.

சிறீலங்கா நவபாசிசம், ஏகாதிபத்தியம், சியோனிசம், போன்றவற்றிற்கெதிரான எமது போராட்டம் முற்போக்கான போராட்டம் மாத்திரமல்ல சர்வதேசப் பாட்டாளி போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாக ஒரு பகுதியுமாகும். எனவே எமது போராட்டத்திற்கு உலக வர்க்க சோசலிச முகாமும் முற்போக்கும் ஜனநாயக சக்திகளும் தோள் கொடுக்கத் தயாராய் உள்ளன. இந்த நிலையில் உறுதியான ஓர் ஐக்கியத்தை எமக்கிடையில் உருவாக்கி ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதே அவசியமும் அவசரமுமாகும். எமது செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா ஒருமுறை குறிப்பிட்டது போல் '' இந்த நேரத்தில் நாம் ஒன்றுபடவில்லையானால், எமது மக்களுக்கு நாமே துரோக மிழைத்தவர்கள் ஆவோம்.''

**ஒன்றுபடுவதற்காகப் போராடுவோம்.**
**போராடுவதற்காக ஒன்றுபடுவோம்.**

---

## சர்வ தேசிய கடமை !

கிரானடாவில் ஆக்கிரமிப்பு நடத்திய ஏகாதிபத்திய அமெரிக்காவின் விமானப்படையின் 82 வது பிரிவு உஷார் படுத்தப்பட்டிருக்கிறது. சோவியத் போர் விமானங்கள் நிகரகுவாவிற்கு அனுப்பப்படுவதாக தவறான தகவலைப் பரப்பி ஆக்ரமிப்பு நடத்த அமெரிக்க கொலைக் கும்பல் திட்டமிட்டுள்ளது. சகோதர நாடான நிகரகுவாவை அந்நிய எதிரிகளிடம் இருந்து காக்கும் **சர்வ தேசியக் கடமையை** சோவியத் நிறைவேற்றி வருகிறது. அமெரிக்க ஆக்கிரமிப்புநடத்தப்படுமானால் ஏகாதிபத்தியத்துக்கு அது நாசகரமாகவே இருக்கும். அமெரிக்கா இலகுவில் வெற்றி பெற முடியாது என சோவியத் யூனியன் அமெரிக்கக் கொலைக் கும்பலை எச்சரித்துள்ளது.

---

# சமூக விரோதிகள் ஒழிப்பு - சரியான நடவடிக்கையா ?

ஈழமக்களுக்கு இப்போதெல்லாம் சமூக விரோதி என்னும் சொல் மிகவும் பரிச்சயமானதொன்றாகி விட்டது. சிலவிடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் ஒருநபரை சமூக விரோதி என முத்திரை குத்திச் சுட்டுக்கொல்வது அடிக்கடி நடக்கும்சம்பவங்களாகி விட்டன. இதனைப் பத்திரிகைகளில் படிக்கின்றோம், நேரில்கூட கண்டிருக்கிறோம். இதைப் பற்றிப் பரவலாக மக்களிடையே பலவிதமான அபிப்பிராயங்கள் எழுந்துள்ளன. மக்களை வழி நடத்தும் சகல இயக்கங்களும் இதனைப் பற்றிய தங்களுடைய உறுதியான நிலைப்பாட்டினை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியவர்களாகின்றனர்.

பொதுமக்களின் உயிர், உடல், உடைமைகளின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிப்பதில் நேரடியாக ஈடுபடுபவர்கள் சமூக விரோதிகளெனக் கருதப்படுகிறார்கள். இவர்களை தேசத் துரோகிகளிடமிருந்து இனம் பிரித்துக் காண்பது முக்கியம். விடுதலைப் போராளிகளை அரசுக்குக் காட்டிக் கொடுப்பவர்கள், தமது சுயநல நோக்கங்களுக்காகத் தேச நலன்களுக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள், தேசத் துரோகிகளெனச் சொல்லப்படுகின்றனர்.

விடுதலை இயக்கங்களுக்கும் அவற்றின் அங்கத்தினரின் உயிர்களுக்கும் பாதகம் விளைவிக்கும் இப்புல்லுருவிகள் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பது போராட்ட நலனுக்கு உகந்ததாகவே உள்ளது.

ஆனால் சமூக விரோதிகள் எனக் கூறப்படுபவர்கள் கொஞ்சம் சிக்கலான பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றனர். மேலே அளித்த விளக்கத்தின்படி கொலை, கற்பழிப்பு, களவு போன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் சமூகவிரோதிகள்; மக்களை ஏமாற்றி பணம், நிலம் போன்றவற்றை அபகரிப்பவர்களும், சமூக விரோதிகளே ; ஏற்றத் தாழ்வுகள் மிக்க எமது சமுதாயத்தில் இவ்வகையினர் எப்பொழுதும் ஒருபகுதியினராக

www.tamilarangam.net



இருந்த போதிலும் இப்பொழுது மட்டும் சர்ச்சைக் குரியவர்களாக மாறியதற்கு இரு காரணங்களைக் காட்டலாம்.

1. குற்றச் செயல்கள் கட்டுக்கடங்காமல் அதிகரித்தமை.
2. சில இயக்கங்கள் குற்றம் புரிபவர்களின்மேல் பாரதூரமான நடவடிக்கைகள் எடுத்தமை.

ஈழப் பிரதேசங்களில் குற்றச் செயல்கள் அதிகரித்ததற்குப் பல காரணிகளைக் காட்டலாம். அவை பின்வருமாறு :

★ இங்கு தனிநபர் பயங்கரவாதம் தலைதூக்கியதுடன் சிறீலங்கா காவல் துறையினர் தம்முடைய பாதுகாப்புக் கருதியும், ஒருதகவலும் தராத பொதுமக்கள்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் விதமாகவும் தமது சாதாரண கடமைகளைச் செய்யாமை.

★ தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளினால் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், அடிமட்ட மக்களை அனாதரவான நிலைக்குத் தள்ளி குற்றம் செய்யத் தூண்டியது.

★ கட்டுப்பாடில்லாத இறக்குமதிக் கொள்கையினால் பயிர்ச் செய்கைகளில் இருந்து விலக்கப்பட்ட கூலித் தொழிலாளிகள் வேலையற்றவர்களாகி வேறு வேலைவாய்ப்பு கிடைக்காது குற்றஞ் செய்யத் தூண்டப்பட்டமை.

★ விடுதலை இயக்கங்கள் தகுந்த அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்காது சமூகத்தின் குற்ற மூலங்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்ததால், இப்பகுதியினர் பின்பு தமது சொந்த நலன்களுக்கு அதைப் பிரயோகித்தார்கள்.

★ வங்கிக் கொள்ளைகள் போன்றனவற்றில் இயக்கங்கள் ஈடுபட்டது, மக்களுக்கு ஏற்கனவே அறிமுகமாகி இருந்ததினால் இயக்கங்களின் பெயரால் குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு இலகுவில் சுவடின்றித் தப்பித்துக் கொள்ள நிலைமை ஏதுவாக இருந்தது.

மேலே கொடுக்கப்பட்டதை நோக்கினால் குற்றச் செயல்கள் பரவலாக நடைபெறுவதைத் தவிப்பதிலே கூட விடுதலை இயக்கங்களுக்குப் பெரும் பங்குண்டு என அறியலாம். அரசியலறிவு மேம்பட்டு வளர்ந்த அங்கத்தினருக்கு ஆயுதப் பயிற்சி அளிக்க வேண்டும். தனிநபர் பயங்கரவாதம் மக்களுக்குப்பெரும்



**" சமூக விரோதிகளை உருவாக்குவதில் இயக்கங்களுக்கும் பங்குண்டு."**

பிரச்சினையைத் தோற்றுவிக்குமேயன்றி அதே ஒரு தீர்வாகாதென்பதை உணரவேண்டும். பொதுமக்களுக்கெதிரான அந்தக் குற்றச் செயல்களில் தாம் ஈடுபடமாட்டோம் எனத் தெளிவாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலமோ, அன்றி பிரச்சாரங்கள் மூலமோ மக்களுக்கு விளக்கி அப்படிச் செய்பவர்களை இனங்கண்டு கொள்ள மக்களுக்கு உதவவேண்டும். இது தவிர, கிராம மட்டங்களில் சிறு அளவுகளிலாவது சுய வேலைவாய்ப்புத் திட்டங்களையும் பல்வேறு கூட்டுறவு முயற்சிகளையும் தோற்றுவிக்க வேண்டும்.

இக்குற்றச் செயல்களுக்குத் தாங்களே ஓரளவு காரணியாகினர் என்பதினாலும் பொதுமக்கள் அச்சுறுத்தல் இல்லா வாழ்வுக்கு இயலுமானதைச் செய்ய கடமைப் பட்டிருக்கின்றன என்ற வகையிலும் விடுதலை இயக்கங்கள் இதில் நேரடியாகத் தலையிட நிர்பந்திக்கப்பட்டன.

சமூகவிரோதி மீதான இயக்கங்களின் நடவடிக்கைகள் சில இடங்களில் சொந்த விசயங்களுக்காகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதையும் கண்டோம் விடுதலை இயக்கங்கள் மக்களுக்குத் தாம் ஆற்றும் பங்கு என்ன என்பதையும் விடுதலைப் போராட்டத்தில் மக்களுக்குள்ள பங்கு என்ன என்பதனையும் தெளிவாக விளங்கிக் கொண்டால் தம் நடவடிக்கைகளிலும் சரியாகவே இருக்கும்.

தம் இன்னல்களைத் தாமே தீர்த்துவைக்க மக்களுக்கு இயக்கங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். இதை விடுத்துத் தாங்களே நடவடிக்கை எடுப்பதன் மூலம் மக்களுக்குப் பொதுநலத்தையிட்டு இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியை மழுங்கடித்து விடுகின்றன. சமூகப் புல்லுருவிகளை மக்கள் இனங்கண்டு கொள்ள உதவுவதுடன் தீர ஆராயாது தண்டிப்பதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

சமுதாயத்தின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு காணும் தீர்க்கமான பங்கு தங்களுடையதே என மக்கள் உணர்ந்து கொள்வதற்கு இயக்கங்கள் தடையாக நிற்கக்கூடாது. பிரச்சினையின் தன்மையினை ஒட்டிப் பாதுகாப்புக் குழுக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்பதோ, விசாரணை மன்றங்கள் அமைப்பதோ எதனையும் மக்களை இணைத்துக் கொண்டே நிறைவேற்ற வேண்டும்.

இதன் மூலம் அயலான் உதவிக்கு அழைக்கும்போது கேளாதவராய்த் தனிவாழ்க்கை வாழும் நிலையில் இருந்து மக்கள் முன்னேறியவர்களாகின்றனர்.

இதற்கு மாறாகக் காரண காரியங்களை ஆராயாது எவ்வகைக் குற்றங்களுக்கும் துப்பாக்கி தூக்குவோமேயானால் சமுதாயத்தில் அடக்குமுறைகளும் ஏதேச்சதிகாரங்களும் மலிந்துவிட வழி வகுத்தவர்களாவோம். ஈழமக்களின் உயிரைத் துச்சமென மதித்துக் கொன்று குவிக்கும் அரசின் கூலிப் படையினருக்கும், தம்மை விடுதலைப் போராளிகள் என்று கூறிக்கொண்டு சில இயக்கங்களைச் சார்ந்து திரிந்து நீதி நியாயமின்றிச் சுட்டுத் தள்ளுபவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

சாதாரண குற்றச் செயல்களுக்கெல்லாம் மரணதண்டனையையே வழங்கிடுவோமெனில் சனநாயகத்துக்கும், சமத்துவத்துக்கும் போராடுகின்றோம் என நாம் கூறுவதே போலி வேடமாகிவிடுகின்றது. நாமே சமூக விரோதிகளாகின்றோம்.

பகல் கொள்ளை நடத்திப் பகட்டாய்ப் பெரிய மனிதர் வேடம்போடும் உயர் மட்ட வர்க்கச் சமூக விரோதிகளை பாதுகாப்பாக உலவவிட்டு, ஏழை மக்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கையாக சமூக விரோதிகள் ஒழிப்பு நடவடிக்கை அமைந்துவிடக் கூடாது. தனிப்பட்ட பிரச்சினைகளையும் தங்களுடைய சிறுபிள்ளைத்தனமான பொறாமைகளையும், கோபதாபங்களையும் தீர்க்கும் கீழ்த்தரமான நடவடிக்கையாக சமூக விரோதி ஒழிப்பு என்ற போர்வையில் தமது துப்பாக்கிகளை உயர்த்துவதை சில விடுதலை இயக்கங்கள் இனியாவது நிறுத்திக் கொள்ளட்டும்.

***சரியான விசாரணை இன்றி, மக்கள் மத்தியில் புல்லுருவிகளை இனம்காட்டாது தண்டனை வழங்கும் வழி முறையையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்.***

**மக்களைப் புரட்சிக்கு இட்டுச்செல்லும் பாதையை ஒரு போதும் கைவிட வேண்டாம்.** ●

# மகத்தான மக்களின் உன்னத புதல்வி



**அக்டோபர் 31, மானிட வரலாறு தனது எதிரிகளின் மிகவும் கோரத்தனமான கொலைச் செயலைக் கோபத்தோடு குறித்துக் கொண்டது.**

மனிதர்களின் இரத்தத்தில் தமது கரங்களை நனைத்த கறைபடிந்த கரங்கள், அன்று சிலியில் தோழர் அலண்டேயைப் பலியெடுத்த கொலைக் கரங்கள் இன்று அண்டை நாடான இந்திய மண்ணில் இரத்தத்தைச் சிந்தவைத்துள்ளன.

இந்துமாக்கடலில் ஏகாதிபத்திய அமெரிக்காவினதும், அதன் "நேட்டோ" ஒப்பந்த இராணுவ வெறிவாதக் கும்பலினதும் மேலாதிக்க வெறிக்கு இந்தியத் துணைக்கண்டம் ஒரு தடை அரண். அதுவும் சோவியத் யூனியனுடனும் ஏனைய சோசலிச நாடுகளுடனும் அணி சேர்ந்து, தேச விடுதலை இயக்கங்களுடன் கரம் கோர்த்து, அணிசேரா நாடுகளை ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையில் தலைமை அளித்து, வழி நடத்தும் வலுமிக்கத் தடை அரண்.

இந்தத் தடை அரணைத் தகர்த்தெறிய ஏகாதிபத்திய பயங்கரவாதிகள் எடுத்துவரும் முயற்சிகள் நீண்டகால அடிப்படை கொண்டவை. இந்தியா மீது ஏகாதிபத்தியத்தின் பகைமை இன்று, நேற்று ஏற்பட்டதல்ல; அதேபோல ஆக்கிரமிப்புத் தன்மை படைத்த ஏகாதிபத்திய சக்திகளை எதிர்க்கும் இந்தியாவின் முற்போக்கான வெளியுறவுக் கொள்கையும் இன்று, நேற்று திடீரென ஏற்பட்டதல்ல.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உலக சமாதானத்துக்காக நடத்தப்பட்ட போராட்டத்தில் சுதந்திர இந்தியா பங்கெடுத்துக் கொண்டது. இந்தியாவின் முதல் பிரதமர் நேரு உலக சமாதானத்துக்காக, சோசலிச நாடுகளுடன், குறிப்பாகச் சோவியத் யூனியனுடன் பரஸ்பர சமத்துவத்துடனான உறவை உருவாக்கினார். நேருவின் காலத்திலேயே அடித்தளமிடப்பட்ட இந்திய—சோவியத் உறவு ஏகாதிபத்திய சக்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**களை** இந்தியா மீது சீற்றம் கொள்ளச் செய்தது.

சர்வதேச ரீதியாக முற்போக்குச் சக்திகளுடன் ஒற்றுமையையும், கூட்டணியையும் வளர்க்க இந்தியா எடுத்து வரும் முயற்சி நேரு காலத்திலேயே மலர்ந்தது.

ஏகாதிபத்தியத்துக்கும் அதன் காலனியாதிக்கக் கொள்கைக்கும் எதிரான இந்தியாவின் உறுதிமிக்கக் கொள்கையை உருவாக்கியதில் நேருவின் பங்கு மிகப் பெரியது நேருவின் கூட்டுச் சேராக் கொள்கை பற்றிய கருத்துகள் நடைமுறையற்ற தன்மை கொண்டவை அல்ல. **''சுதந்திரமும், நீதியும் அச்சுறுத்தப்படும் போது, ஆக்கிரமிப்பு இழைக்கப்படும் போது நடுநிலைமை வகிக்கும் பிரச்சினைக்கே இடமில்லை''** என்று நேரு கூறியுள்ளதை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

எப்போதுமே புரட்சிகர சக்திகளின் ஒற்றுமையை ஏகாதிபத்தியம் விரும்பியது கிடையாது. இனியும் விரும்பாது. இதனால் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளைப் பிளவுபடுத்திப் பலவீனமாக்க அது பலவழிகளிலும் முயன்று வருகிறது.

அணிசேரா நாடுகளின் தலைமையை இந்தியா ஏற்றது, அதன் அணிசேராக் கொள்கையின் உறுதிக்கும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அதன் தொடர்ந்த போராட்டத்துக்கும் கிடைத்த வெற்றியாகும்.

இதன் அடிப்படையில்தான் இந்தியாமீது ஏகாதிபத்தியமும் அதன் ஏவல் நாய்களும், டாலர் நோட்டுகளுக்குச்சோரம்போன தேசத் துரோகக் கும்பலின் உதவியுடன் தமது பயங்கரவாத நாசத்தனங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

**சர்வதேசரீதியாக சோசலிச முகாம்மீதும், தொழிலாளர் வர்க்க இயக்கம், மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் மீதும் ஏகாதிபத்தியத்தால்மேற்கொள்ளப்பட்டுவரும் பயங்கரவாத படுகொலை நடவடிக்கைகளின் ஒரு கட்டமே திருமதி காந்தியைப் படுகொலை செய்துள்ள, ஏகாதிபத்தியத்தால் மனிதகுலத்துக்கு இழைக்கப்பட்டுள்ள மாபெரும் துரோகச் செயலாகும்.**

ஏகாதிபத்தியத்தையும், அதன் ஏவல் நாய்களையும எதிர்த்துப் போராடும் ஈழ மக்களுக்கு இந்திய மக்களின் சார்பில் திருமதி காந்தி பக்கபலமாக இருந்தார். சிறந்த நண்பராக விளங்கினார்.

இதனால்தான் திருமதி காந்தி படுகொலையான செய்தி கேட்டு ஈழம் துயரத்தில்தோய்ந்தது, ஈழமக்களிடம் அன்புக்குரியவராக அவர் இருந்ததற்கு எடுத்துக்காட்டாகி விட்டது.

சிறீலங்கா சிங்கள இனவெறியர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தார்கள். ஈழ மண்ணில் தமது உற்ற நண்பரை இழந்த



துயரத்தில் பங்கு கொண்ட ஈழ மக்களைத் துப்பாக்கிக் குண்டுக்குத் தீனியாக்கிப் பாசிசப் பட்டாளங்கள் வெறித் தாண்டவமாடின. வீதிகளில் கறுப்புக் கொடிகள் கட்டுவதில் ஈடுபட்டிருந்த ஈழ வாலிபர்கள் இராணுவத்தின் இரத்தவெறித்தனத்துக்குப் பலியாகினர்.

திருமதி காந்தியின் மரணம் தாக்கமுடையது. ஈடு செய்ய பட முடியாத இழப்பு. ஆனால் **கண்ணீர் விடுவதால் இந்த இழப்பின் சுமை குறையாது.** இந்தக் கொலையின் ஆதி மூலங்கள், சூத்திரதாரிகள் கூட இரங்கல் தீர்மானத்தை எழுதிக் குவிக்கும் போது உண்மையான ஏகாதிபத்தியத்தினுடைய எதிரிகளின் கடமை திருமதி காந்தியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு இலட்சியத்தை உறுதியுடன் தொடர்வதேயாகும். ஏகாதிபத்தியம் முற்றாக முறியடிக்கப்படும் வரை, உலக முதலாளித்துவ அமைப்பு தகரும் வரை நாடுகளின் தேசிய சுதந்திரம் அச்சுறுத்தப்படுவ'தும் தொடரும், சர்வதேசப் பயங்கரவாதிகளின் கோரத்தனங்களும் நீளும்.

ஈழமக்களாகிய நாம் **திருமதி காந்தி விரும்பியது போலவே எமக்கிடையில் பொது எதிரிக்கெதிராக வலிமையான ஒற்றுமையை உருவாக்குவோம்.**

**இந்திரா மறைந்து விட்டார். ஆனால் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளிடம் அவர் நீடூழி வாழ்கிறார்.**

இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள **ராஜீவ் காந்தி** அணிசேரா நாடுகளை ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையில் வழி நடத்துவார் என்று நம்புகிறோம். தேசிய விடுதலைப் போராட்டங்களுடனும், சோசலிச நாடுகளுடனும் இந்தியாவின் உறவை மேலும் வலுப்படுத்துவார் என்பதும் எமது நம்பிக்கையாகும்.

**ஈழ - இந்திய நட்புறவு ஓங்குக!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆகாவென்றெழுந்த அக்டோபர் யுகப் புரட்சி

## இந்த நூற்றாண்டின் மாபெரும் நிகழ்ச்சி

**1917-ம்** ஆண்டு அக்டோபர் 25ம் நாள் (புதிய காலண்டர் படி நவம்பர் 7) அந்த மாபெரும் நாட்டில் ஆகாவென்றெழுந்த அக்டோபர் யுகப்புரட்சி புதியதோர் சகாப்தத்தை மனித குலத்துக்கு அறிமுகப்படுத்தியது.

அக்டோபர் சோசலிசப் புரட்சியின் வெற்றியின் பின் தோழர் லெனின் குறிப்பிட்டார், ''இந்த நாட்களில் மனித வரலாறு, சிறிதும் மிகைப்படுத்தாமல் கூறினால் உலக விடுதலைக்கான மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்பத்தை, ஒரு மிகவும் கடினமான, முக்கியத்துவம் வாய்ந்த திருப்பத்தை மேற்கொண்டிருக்கிறது...''



வரலாற்று அரங்கில் மார்க்சிய லெனினிய புரட்சிகரக் கட்சியினால் முதன் முதலில் தலைமை தாங்கப்பட்ட அக்டோபர் சோசலிசப் புரட்சியின் வெற்றி, சோவியத் மண்ணில் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமைக்கு முடிவு கட்டியது.

- ★ பொருள் உற்பத்தி—விநியோகம் தொழிலாளர் கட்டுப்பாட்டுக்கு வந்தது.
- ★ விவசாயிகள் அனைவருக்கும் நிலம் வழங்கப்பட்டது.
- ★ பெண் அடிமைத்தன இருள் கீறிக் கிழிக்கப்பட்டது.
- ★ கல்லாமைக்குச் சாவுமணி அடித்து அறிவொளி பரப்பப்பட்டது.

அக்டோபர் புரட்சியின் பின் அறுபத்து ஏழு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. சோவியத் நாட்டின் வளமான வாழ்வுக்காக மட்டுமின்றி, சர்வதேச விடுதலைக்கான ஆரம்பமாகவும் அமைந்த அக்டோபர் புரட்சியின் புரட்சிகர இலட்சியம் இன்று உலகளாவிய முறையில் வளர்ந்து கொண்டும், வலுவாகிக் கொண்டும், வெற்றிபெற்றும் வருகிறது.

சோவியத் நாட்டில் உலகிலேயே ஆகமுன்னேறிய புரட்சிகர வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரம் உதயமானபோதுதான் ஏகாதிபத்திய உலகின் காலனித்துவ சுரண்டலுக்கும் அஸ்தமனக் காலம் ஆரம்பமானது.

ஏகாதிபத்திய கொள்ளையரின் காலனித்துவ நுகத்தடியில் துவண்டுகிடந்த காலனி நாட்டு மக்களுக்கு நம்பிக்கைக்குரிய உற்ற துணைவனை, உறுதியான பாதுகாவலனை அக்டோபர் புரட்சி பிரசவித்தபோது ஏகாதிபத்திய உலகம் அதிர்ச்சிக்குள்ளாகியது.

எனவேதான் சோவியத் நாட்டுக்கு எதிராக—**அக்டோபர் புரட்சியைப் படைத்து உலகைக் குலுக்கிய அந்த மாபெரும் நாட்டின் பாட்டாளிவர்க்க அரசுக்கு எதிராக பிற்போக்கு ஆதிக்கச் சக்திகள் ஒன்று திரண்டன.**



உலகெங்கும் உள்ள சுரண்டுகின்ற, தேசங்களைத் தங்கள் காலடியில் போட்டு மிதித்து, மானுட நியாயங்களின் குரல்வளையை நெரிக்கின்ற சர்வதேசக் குற்றவாளிகள்தான் சோவி

www.tamilarangam.net



யத் மீதும் குரோ தம் கொண்டனர்.

இதனால்தான் தோழர் **லெனினுக்குப்** பின் சோவியத் நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்த புரட்சி வீரர் **ஸ்டாலின்** காலகட்டத்தில் உலகப் பாசிசம் சோவியத் மீது வெறித்தனமான காழ்ப்புடன் யுத்தத்தை ஏவிவிட்டது.

உலகைத் தமக்கிடையே மறுபங்கீடு செய்யும் ஏகாதிபத்திய கொள்ளையரின் யுத்தவெறி சோவியத் பூமியை விழுங்கிக் கொள்ள துடியாய்த் துடித்தது. உலகப் பாசிசத்தின் ஆதிக்க வெறி, உலகெங்கும் உள்ள மக்களைப் பீரங்கித் தீனியாக்கித் தமது சுரண்டல் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள இரண்டாம் உலகப்போரை உருவாக்கியது.

தொழிலாளி—விவசாயி அரசும், சமாதானத்துக்கான குரலும் ஒரே நேரத்தில் ஓங்கி ஒலித்த மண்ணல்லவா சோவியத் நாடு. முதலாம் உலகப் போரில் ஏகாதிபத்திய கொள்ளையர் உலகை மறுபங்கீடு செய்ய தமக்கிடையே போரிட்டுக் கொண்டிருந்தபோது தோழர் லெனினின் சமாதான உத்தரவுடன் தொழிலாளர் விவசாயிகள் அரசு உதயமான நாடுதானே சோவியத் யூனியன்.

இரண்டாம் உலகப் போரிலும் உலகப் பாசிசத்துக்கு சாவு மணி அடித்து, இரண்டாம் உலக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர, சோவியத் நாட்டையும், உலக மக்களையும் மனித குலப் பகைவர்களிடம் இருந்து காக்க சோவியத் யூனியன் போரில் ஈடுபட வேண்டிய தேவை எழுந்தது.

சோசலிச தாய் நாட்டையும், சர்வதேச மக்களையும் காக்கும் போரில் சோவியத் மக்கள் உலகமே கண்டிராத வகையில் மகத்தான தியாகங்கள் புரிந்தனர். இரண்டாம் உலகப் போரில் பாசிசத்தின் தோல்வி என்பது சர்வதேசியப் புரட்சியின் பாதுகாப்பு அரணான சோவியத் மண்ணிலும் நாஜி ஜெர்மனியிலும் நடந்த போர்க்களங்களிலும்தான் இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டன. எந்த வரலாற்று ஆசிரியனாலும் இதை மூடி மறைக்க முடியாது.

1941 முதல் 45 வரையான நாஜி ஜெர்மனிக்கு எதிரான சோவியத் மக்களின் தேசபக்தப் போரில் நாசிசத்தால் அடக்கி, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான செயல் திட்டத்தைச் சோவியத் பிரகடனப்படுத்தியது. 1941 ஜூலை 3 ம் திகதி சோவியத் நாட்டின் செம்படையின் பிரதம தளபதி தோழர் **ஸ்டாலின்**



சோசலிச சோவியத் யூனியனதும்,
சோசலிச நாடுகளதும் அனுபவங்களைக்
கற்றுக் கொள்வோம்.

வானொலியில் பேசும் போது "**தேசபக்தப் போரின் நோக்கம் இந்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அபாயத்தை அகற்றுவது மட்டுமல்ல, ஜெர்மன் பாசிச நுகத்தடியின் கீழ் உழன்றுவரும் சகல ஐரோப்பிய மக்களுக்கு உதவுவதும், தங்கள் விருப்பப்படி தமது சொந்த நாட்டில் வாழ அவர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிப்பதும் தான்**" எனச் சர்வதேசியக் கடமையுணர்வுடன் உறுதியாக அறிவித்தார். பாசிசத்தைத் தோற்கடித்த சோவியத் நாட்டின் புரட்சிகரப் படைகள், பாசிச நுகத்தடியை உடைத்தெறிய போராடிக் கொண்டிருந்த தமது சகோதர புரட்சிகரப் படைவரிசைகளுக்கு ஓடோடிச் சென்று உதவின.

சோவியத் யூனியன் பாசிசத்தின் மீது அடைந்த வெற்றி சோசலிசத்தின் ஜீவசக்தியை, யாராலும் வெல்லப்பட முடியாத அதன் வலிமையைப் பிரபஞ்சம் எங்கும் பிரகடனப்படுத்தியது.

நமது நாட்களில் உலக சோசலிச அமைப்பு ஒன்று நிலவுவதும், ஒடுக்கப்படும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்கள் சர்வ தேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பிரிக்கப்பட முடியாத நிகழ்ச்சிப் போக்காக மாறி இருப்பதும் ஏகாதிபத்தியத்தைச் சர்வதேச நிகழ்ச்சிப் போக்குகள் மீது செல்வாக்கு செலுத்த முடியாதவாறு ஆக்கியுள்ளன.

உலக சோசலித்துக்கும், உலக முதலாளித்துவத்துக்கும் நடக்கும் வர்க்கப் போராட்டத்தில் சோசலிசத்தின் பக்கம் விடுதலை பெற்ற நாடுகள் ஈர்க்கப்பட்டுவருகின்றன. சோவியத் யூனியனும், ஏனைய சோசலிச நாடுகளும் இருப்பதன் மூலம் தான் பொருளாதார ரீதியாக வளரும் நாடுகள் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து வாழும் நிலையை விட்டொழிக்க முடிந்துள்ளது.

வீர வியட்னாமின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார்: "**ஒவ்வொரு வியட்நாமியனுக்கும் இரண்டு தாயகங்கள் உண்டு, ஒன்று சோவியத் யூனியன், மற்றையது வியட்நாம்**"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏகாதிபத்திய அமெரிக்காவுக்கு மிகப் பெரும் சவாலாக, புரட்சிகர சக்திகளுக்கு வலிமையான நேச நாடகத் திகழும் கியூபா நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியகமிட்டி செயற்குழு உறுப்பினர் தோழர் கார்லோஸ் ராபீல் இவ்வாறு குறிப்பிட்டார்: **''பூமியின் மேற்குப் பாதியின் சோசலிசப் பாசறையாக அமைந்துள்ள எங்கள் நாட்டை பாதுகாப்பதில் சோவியத் யூனியன், சோசலிச முகாம், புரட்சிகர இயக்கம் முழுவதின் ஆதரவையும் நாம் பெற்றோம்... சோவியத் யூனியனும், சோவியத் மக்களும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் எங்களுக்கு அளிக்கும் ராணுவ உதவி, பொருளாதார ஆதரவு, அரசியல், தார்மீக ஒருமைப்பாடு மகத்தானவை''** மேற்கண்ட கூற்றுக்கள் உண்மையானவை. தனது பங்குக்கு சோவியத் யூனியன் ஆற்றி வரும் புரட்சிகரக் கடமையின் காத்திரமான தன்மையை வெளிச்சமிட்டுக் காட்டுபவை.

ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்து மீள்வதற்கும், ஏகாதிபத்தியத்துக்கு முடிவு கட்டவும் போராடும் முற்போக்குச் சக்திகளுக்குச் சோவியத் யூனியனும் சோசலிச முகாமும் அளிக்கும் சர்வதேசிய உதவிகளைக் கொச்சைப்படுத்தி, திரிபுபடுத்துகின்ற — சொல்லளவில் சோசலிசத்தை அங்கீகரித்து, செயலில் ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவாகச் செயல்படும் சக்திகளிடம் விழிப்போடிருப்போம்.

ஈழத்தின் தேசிய, சமூக விடுதலைக்காகப் போராடும் நாம் சோவியத்தின் சோசலிச நிர்மான அனுபவங்களையும், ஏனைய சகோதர சோசலிச நாடுகளின் அனுபவங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும். மனிதனை மனிதன் சுரண்டாத, மனிதனை மனிதன் மதித்துப் போற்றுகின்ற புதியதோர் சமுதாயத்தை ஈழத்திலும் படைக்க அக்டோபர் புரட்சி நாளில் உறுதி ஏற்போம்.

உலக சோசலிச முகாம், ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள், ஜனநாயக இயக்கங்களுக்குப் பூரணமான ஆதரவளிப்போம். ஈழத்தின் தேசிய ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டுவோம். சிறீலங்காவின் முற்போக்குச் சக்திகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, புரட்சிகரப் போராட்டங்களுக்குச் செயலுக்கமான ஆதரவை வழங்குவோம்.

***அக்டோபர் புரட்சி நீடூழி வாழ்க!***

***புதிய சிந்தனைகள் வளம் பெறுக!***

# "தமிழீழத்தின் குரலின்" தவறான போக்கு

சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தகவல் தொடர்புச் சாதனங்கள் ஈழ விடுதலைக்கான அமைப்புக்கள் மீது அவதூறுகளை வாரி இறைக்கின்றன. விடுதலை அமைப்புக்கள் இடையே மோதலை உருவாக்கவும், மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டாக்கவும் இந்தத் தகவல்தொடர்புச் சாதனங்களை அரசு பயன்படுத்துகிறது.

மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பி அவர்களைக் குழப்பும் பாசிஸ்டுகளது முயற்சிகளை முறியடிக்கும் கடமை ஒவ்வொரு விடுதலை அமைப்புக்கும் உண்டு.

தமது அரசியல் திசைவழிபற்றி எடுத்துக் கூறவும், ஏனைய விடுதலை அமைப்புக்கள் விடும் தவறுகளை மக்கள் மத்தியில், சுட்டிக்காட்டவும் ஒவ்வொரு விடுதலை அமைப்புக்கும் உரிமை உண்டு. ஆனால் சக விடுதலை அமைப்பொன்றைப் பற்றி கூறும் கருத்துக்களும், விமர்சனங்களும் உண்மைக்குப் புறம்பானதாகவும், விடுதலை அமைப்புக்கள் இடையே ஏற்பட்டு வரும் புரிந்துணர்வை இல்லாதொழிக்கும் வகையிலும் அமைந்துவிட இடமளிக்கக்கூடாது.

ஐக்கியம் பற்றிக் கூச்சலிடுவதன் மூலமும், நாமும் ஒற்றுமையை விரும்புகிறோம் என அறிக்கைகள் விடுவதன் மூலமும் உண்மையான ஒற்றுமையைச் சாதித்துவிட முடியாது.

ஒவ்வொரு விடுதலை அமைப்பினதும் அன்றாட நடைமுறைப் பணிகள் ஒற்றுமைக்குத் தீங்கிழைக்காதவாறு அமைய வேண்டும். தமது அணிகளுக்கிடையே மேலிருந்து கீழ் வரை இன்றைய காலகட்டத்தில் பொது எதிரிக்கெதிரான ஐக்கியம் பற்றிய அவசர அவசியத்தை உணர்த்துவதற்கு ஒவ்வொரு அமைப்பும் கவனம் செலுத்தவேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டத்துக்குரிய அன்றாட நடைமுறைகள் ஊடாக ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கும் தன்மையும், சக விடுதலைப் போராளிகளை மதிக்கும் தன்மையும், புரிந்துணர்வுமே இயக்கங்களுக்கிடையான ஒற்றுமையை நடைமுறைச் சாத்தியமாக்கும்.

கடந்தகாலங்களில் நடைமுறை வேலைகளில் ஒருவருக்கொருவர் உதவியதன் மூலமும், அதனால் ஏற்பட்ட புரிந்துணர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வின் அடிப்படையிலுமே **தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** ஆகியவை இன்று ஐக்கிய முன்னணியை உருவாக்கியிருக்கின்றன. ஏனைய விடுதலை அமைப்புக்களையும் இந்த ஐக்கிய முன்னணியில் இணைத்துக்கொள்வதில் இந்த அமைப்புக்கள் உண்மையான அக்கறைகாட்டுகின்றன.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், அதன் வெகுஜன ஸ்தாபனங்களும் தமது நடைமுறை அரசியல், ஸ்தாபன வேலைகளின் போது ஐக்கியத்துக்குத் தீங்கிழைக்காத வகையில் செயல்பட்டு வருவதை ஈழமக்கள் அறிவார்கள்.

ஆனால் சில அமைப்புக்கள் ஒற்றுமைக்குத் தயாராக இருப்பதாகக் கூறியபடியே ஏனைய இயக்கங்கள் மீது சேற்றை வாரியிறைத்துக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் ஒற்றுமைக்கு இவர்கள் குழிபறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஒற்றுமை பற்றி அடிக்கடி பேசுகிறது. ஆனால் ஒற்றுமைக்கு எதிரான—உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்பும் தனது வழிமுறையை அது நிறுத்தவில்லை.

> ''ஐக்கியத்தை சிதைத்து எதிரிக்குப் பலம் சேர்க்கும் வழி முறையை நிறுத்துங்கள். நட்பு முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகள் ஆக்க வேண்டாம்''

''தமிழீழத்தின் குரல்'' ஒலிபரப்பின்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பற்றிய மிகத்தவறானதும், அவமானகரமானதுமான செய்தியை வெளியிட்டுள்ளது.

**சிறீலங்கா பாசிஸ்டுகளது தந்திரோபாயத்தின் காரணமாகத் தமிழகம் சென்றுள்ள புத்தபிக்குகள் குழுவுடன் எமது அமைப்பு பேச்சுவார்த்தை நடத்தியதாகத் ''தமிழீழத்தின் குரல்'' அழுதிருக்கிறது.**

''இந்தியா செல்லும் புத்தபிக்குகள் குழுவுடன் எவ்விதமான பேச்சுவார்த்தையிலும் எமது பிரதிநிதிகள் ஈடுபடப் போவதில்லை'' என்று ஐக்கிய முன்னணியில் உள்ள ஏனைய இரு தோழமை அமைப்புக்களுடன் நாமும் இணைந்து அறிவித்திருந்தோம். இந்தியாவிலும், இங்கும் பத்திரிகைகளில் இச் செய்தி வெளிவந்தது.



ஆனால் **பாசிஸ்டுக்களது தகவல் தொடர்பு சாதனங்களைப் போல்** பொறுப்பற்ற முறையில் கண்மூடித்தனமான பிரச்சாரம் ''தமிழீழத்தின் குரல்'' மூலம் எம்மீது நடத்தப்பட்டுள்ளது.

**தமிழ் ஈழ விடுதலை இயக்கமும், ஈழப் புரட்சி அமைப்பும் நாமும் இணைந்து எடுத்த முடிவிற்கு மாறாக நாம் செயற்படவில்லை. காவி அணிந்த சிங்கள இன வெறியர்களே இந்தியா செல்லும் புத்தபிக்குகள்: அவர்கள் சமாதானப் பிரியர்கள் அல்ல என்பதை நாம் நன்கறிவோம்.**

எனவே தவறான போக்கைத் திருத்திக்கொண்டு, இயக்கங்களின் ஐக்கியத்திற்கு ஊறுவிளைவிக்காது செயற்படவேண்டும் எனத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். இயக்கங்கள் ஐக்கியப்பட்டுச் செயற்படவேண்டிய வேலையில் ஐக்கியத்தைச் சிதைத்து, எதிரிக்குப் பலம் சேர்க்கும் வேலையை நிறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம். இயக்கங்களிடையேயான முரண்பாடுகள் என்பவை எத்தகைய அரசியல் திசைவழியில் செல்வது என்பதிலும், எந்த வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்ற அடிப்படையிலுமே எழுகின்றன. எனவே அரசியல் திசைவழி பற்றிய தவறுகளைச் சுட்டிக்காட்டி, சரியான திசைவழி பற்றிய கருத்துக்களை வெளியிடுவதே ஆரோக்கியமானது. அதைவிடுத்து அவதூறான பொய்ப்பிரச்சாரங்கள் மூலம் சரியான கருத்துக்களை உடைய அமைப்புக்களை மக்களைவிட்டுத் தனிமைப்படுத்தலாம் என யாரும் கருதினால் அது மிகவும் குருட்டுத்தனமானதாகும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சார்ந்த இரு தோழர்கள் சென்று புத்த பிட்சுவைப்பார்த்ததாகத் ''தமிழீழத்தின் குரல்'' அபாண்டமான பிரச்சாரத்தில் இறங்கியுள்ளது. இது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (உமா மகேஸ்வரன் தலைமை) திட்டமிட்டே நடாத்தும் பொய்ப் பிரச்சாரத்தின் ஒருபகுதியே. இவர்களுக்கு உண்மைத் தகவல்கள் கிடைக்காவிடில் எமது தோழர்களை அனுகி உண்மையை அறிந்திருக்கலாம். அதை விடுத்து நடக்காத சம்பவம் ஒன்றை நடந்ததாகக் கற்பனை செய்து ஒலிபரப்புவதானது திட்டமிட்ட சதியென்றே நாம் கருதுகிறோம்.

உண்மையில் இவர்கள் ஒற்றுமையை விரும்புபவர்களாய் இருந்தால் வானொலி மூலம் அவர்கள் நடாத்திய பொய்ப்பிரச்சாரத்தை வானொலி மூலமாகவே மறுக்கட்டும். இதுவே இயக்கங்கள் இடையில் ஒற்றுமை ஏற்படுவதற்கான ஆரோக்கியமான சூழலைத் தோற்றுவிக்க உதவும்.

www.tamilarangam.net



என்றெமது மண்ணின் விலங்குகள் தகரும்?

# இனவாத அரசால் அவதியுறும் ஈழ மீனவர்கள் எதிர்காலம்

மக்கள் மத்தியில் ஈழப் புரட்சிவாதிகள் வேரூன்றியிருக்கிறார்கள். படுகொலை அரசின் ஒடுக்குமுறையிலிருந்து தமது தாயகத்தை மீட்டெடுக்க உறுதியுடன் இருக்கும் ஈழ மக்களிடம் இருந்து ஈழப் புரட்சிவாதிகளைத் தனிமைப்படுத்தி அழித்தொழிக்க நவபாசிச அரசின் கொலைப் பட்டாளங்களால் முடியவில்லை.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் வெகுஜன அடித்தளத்தையும், ஈழப் புரட்சிவாதிகளின் பலத்தையும் சிதைக்க முடியாது என்பதைக் கொலை பாதக அரசு உணர்ந்து வருகிறது. தனது கையாலாகாத்தனத்தை உலகின் கண்களுக்கு மூடி மறைக்க முயல்கிறது.

இந்தியாவிற்குப் பயங்கரவாதிகள் தப்பி ஓடி விடுகிறார்கள் இந்தியாவில் அவர்களுக்குப் புகலிடம் கிடைக்கிறது எனப் பிதற்றித் திரிவதன் மூலம் தனது கையாலாகத்தனத்துக்கான காரணத்தை இந்தியாமீது சுமத்துகிறது.

ஈழப்புரட்சிவாதிகளைக்கடலில் தேடும் கையாலாகாத்தன அரசு ஈழக் கடற்பிராந்தியத்தில் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

**சீனா, சிங்கப்பூர், இஸ்ரேல்** போன்ற ஏகாதிபத்திய அமெரிக்காவின் கூட்டாளிகளிடமிருந்து பீரங்கிப் படகுகளைப் பெற்றுக் கடற்பிராந்தியத்திலும் அமைதியைச் சீர்குலைத்துள்ளது.

இந்தியக் கடற்பிராந்தியத்தில் சிறீலங்கா கடற்படை அத்துமீறியுள்ளதுடன் தமிழக மீனவர்களைக் கைதுசெய்து அவர்களது இழுவைப் படகுகளையும் கைப்பற்றியது.

இதற்கெதிராகத் தமிழக மீனவர்கள் போராட்டக் கரங்களை உயர்த்தினர். தலை மன்னார்— இராமேஸ்வரக் கப்பல் சேவையைத் தடுத்து நிறுத்தும் வகையில் கடலில் படகுகள் சூழ இராமனுஜம் கப்பலை முற்றுகையிட்டு இராமேஸ்வரத்தில் மறியல் நடத்தினர். தமிழக மீனவர்களது போராட்டங்களும், இந்திய மக்களிடம் ஏற்பட்ட கொந்தளிப்பும் கண்டு தமிழக மீனவர்கள் பலரைப் பாசிஸ்டுக்கள விடுதலை செய்தனர்.

இந்திய மீனவர்களுக்கே கொடுமை இழைக்கும் படுகொலை அரசின் கடற்படை ஈழ மீனவர்கள் மீது மட்டும் கருணையுடனா நடந்து கொள்ளும்?

ஈழக் கடற் பிராந்தியத்தில் ஊரடங்கு அமுலாவதற்கு முன்புகூட சிறீலங்கா கடற்படைக் குண்டர்களால் தமிழ் மீனவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டார்கள்.

சிங்கள, தமிழ் மீனவர்களிடையே மோதலை உருவாக்கி அவர்களது ஒற்றுமையைச் சீர்குலைக்க, சிறீலங்கா தரகு முதலாளித்துவ, சிங்கள நிலபிரபுத்துவ அரசு அக்கறை காட்டியது.

ஈழ மீனவர்களது குடியிருப்புக்களை அண்டியுள்ள பகுதிகளில் சிறீலங்கா மீனவர்கள் குடியமர்த்தப்பட்டனர். ஈழ மீனவர்கள் தொழில் செய்யும் கடல் பகுதிகளில் சிங்கள மீனவர்களது அத்துமீறலுக்குக் கடற்படை பாதுகாப்பளித்தது.

கடற் பிராந்தியத்தில் வலம் வரும் படுகொலை அரசின் கடற்படை தமிழ் மீனவர்களது மீன்களைப் பறிமுதல் செய்வதில் ஈடுபட்டது. 'பயங்கரவாதி'களின் படகுகளைக் கண்டால் தமக்கு அறிவிக்குமாறு மிரட்டியது. இரத்த வெறி கொண்ட கடற்படையின் துப்பாக்கிகள் பல ஈழ மீனவர்களைத் தீனியாக்கிக்கொண்டன. அப்பாவி மீனவர்களைப் படுகொலை செய்துவிட்டுப் '' பயங்கரவாதிகளின் படகுகளை நோக்கிச் சுட்டதாக''க் கூலிப்படைகள் கொக்கரித்துக் கொண்டன.

சிறீலங்கா கடற்படையின் மனித வேட்டைகளால் ஈழ மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அஞ்சினர். இதனால் கடல் தொழிலையே தமது ஜீவனோபாயத்துக்கு நம்பி வாழும்மீனவத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வறுமைத்தீயில் வாடினர்.

ஈழத்தில் யாழ்ப்பானக் கடற்கரை ஓரங்களில் சிறீலங்கா கொலைப் பட்டாளம் நடத்திய பீரங்கித் தாக்குதலில் மீன்பிடி வள்ளங்கள் நாசமாக்கப்பட்டன. மீனவர் குடியிருப்புகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூலிப்படையால் கொளுத்தப்பட்டன. பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பெயரில் பல மீனவத் தொழிலாளர்கள் வதை முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். வல்வெட்டித்துறை என்னும் கிராமம் கொலைப்பட்டாளங்களால் சூறையாடப் பட்டது. சொந்த மண்ணிலேயே அகதிகளாகி ஈழ மீனவர்களது குடும்பங்கள் அவதியுற்றன.

அண்மையில் மாதகல் என்னும் கிராமத்திலும் ஆக்கிரமிப்புப் பட்டாளங்கள் தமது மிருகத்தனத்தைக் கட்டவிழத்து விட்டன. மீன்பிடி வள்ளங்களை எரித்து, மீனவர் குடியிருப்புக் களைத் தீயிட்டுக் கொளுத்திக் குதூகலித்த கொலைஞர்கள் பெண்களைத் தமது சதை வெறிக்குத் தீனியாக்கியுள்ளனர்.

ஈழ மீனவர்கள் மீது தொடரும் வன்முறை நடவடிக்கைகள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன.

மன்னார் முதல் நெடுந்தீவு, யாழ்ப்பாணம், காரைதீவு, உட்பட முல்லைத்தீவு வரை உள்ள மீனவத் தொழிலாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வழமையாக மார்கழி மாதம் வாடைக் காற்று, ஆரம்ப மாகிவிட்டால் வல்வெட்டித்துறை மாதகல், மயிலிட்டி, சுழிபுரம், ஊறணி, மணற்காடு போன்ற பகுதிகளிலுள்ள மீனவர்கள் அனலைதீவு, நெடுந்தீவு, நீலக்காடு ஆகிய பகுதிகளில் தை மாதம் முதல் சித்திரை மாதம் வரை தொழில் செய் வார்கள். ஆனால் இம்முறை இப்பகுதியிலும் மீனவர்கள் தொழிலில் ஈடுபட முடியாது.

சிறீலங்கா நவபாசிச அரசு தனது ஒடுக்குமுறைக் கரங்களை ஈழத்தின் சகல மக்கள் பகுதிகள் மீதும் அகல விரிக்கிறது. தமது அன்றாட வாழ்வுக்கே குந்தகம் ஏற்படுத்தும் அடக்கு முறையாளர்களை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழுவதை அரசின் ஒடுக்கு முறைகள் அதிகப்படுத்தியே தீரும்.

தமது எதிர்க்காலம் சிதைவுற்று அன்றாட ஜீவனோபாயத் துக்கே ஏங்கிக் கொண்டிருக்கும் ஈழ மீனவர்களும் வெகு ஜன போராட்டத்தில் தமது இயல்பான போர்க்குணத்துடன் பெரும் திரளாக இணைந்து கொள்வதை அரசின் அடக்கு முறை ஊக்குவித்துள்ளது.

**என்றெமது மண்ணில் அடிமை விலங்குகள் தகருமோ, அன்றே எமது இன்னல்கள் அனைத்தும் தகர்ந்து பொடியாகும்.** இதற்கான வெகுஜன ஆயுதப்போராட்டத்தில் அடக்கப்படும் அனைத்து மக்களும் ஒன்றுப்படவேண்டும். ★

# சர்வதேச அரங்கில்

## தென்னாப்பிரிக்காவில் படுகொலைகள் தொடர்கின்றன !

சிறீலங்கா அரசுக்கு உதவியளிக்க ஓடோடி வந்துள்ள ஏகாதிபத்தியத்தின் செல்லப் பிராணியான நாடுகளுள் தென்னாப் பிரிக்காவும் ஒன்றாகும்.

தென்னாப்பிரிக்காவில் கறுப்பு இன மக்களைச் சங்காரம் செய்யும் நிற வெறியர்கள் கடந்த பெப்ரவரி முதல் இது வரை ஏராளமானோரைப் படுகொலை செய்துள்ளனர். கிடைத் துள்ள பூரணமற்ற புள்ளி விவரங்களின் படி 131 பேர் இவ்வாறு கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இவ்வாறு படுகொலையானவர்களில் மாணவர்களே பெரும் பாலானோராகும்.

தமது கல்வி முறையில் மேம்பாடு காணுவதற்கான நிலையை ஏற்படுத்துமாறு மாணவர்கள் போராடிய போது தென்னாப்பிரிக்கக் கூலிப் படைகள் படுகொலைகள் நடத்தி யுள்ளன.

அமெரிக்காவால் பாதுகாக்கப்படும் தென்னாப்பிரிக்க நிற வெறி அரசு, அமெரிக்காவின் பக்கபலம் இன்றி ஒரு நிமிட நேரம் கூட நீடித்திருக்க முடியாது. *

## ஆப்கான எச்சரிக்கிறது !

அக்டோபர் 21ம் திகதி ஆப்கானிஸ்தானில் தரை இறங்க முயன்ற அந்த நாட்டு ஹெலிகாப்டர்கள் இரண்டைப் பாகிஸ் தான் தனது எல்லையிலிருந்தவாறு தாக்கியுள்ளது. இந்த நாச கார நடவடிக்கையை ஆப்கான் கண்டித்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் தொடருமானால் ஆப்கான் தனது இறைமை யைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் இறங்கவேண்டியிருக்கும் என ஆப்கான் பாகிஸ்தானை எச்சரித்துள்ளது.

ஆப்கான் எதிர்ப் புரட்சியாளர்களுக்குப் பாகிஸ்தான் ஊக்கமளித்து வருகிறது. ஏகாதிபத்திய அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனம் ( சி. ஐ. ஏ. ) பாகிஸ்தானில் வைத்து ஆப் கான் எதிர்ப் புரட்சியாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விஷக் குண்டுகள், மற்றும் நவீன ஆயுதங்களையும் வழங்கி வருகிறது.

பாகிஸ்தானை யுத்த விளைநிலமாக்கும் ஏகாதிபத்தியம் அதன் இராணுவ வலிமையை அதிகரிப்பதன் மூலம் பாகிஸ் தானுக்கு அயலிலுள்ள நாடுகளுக்கு அச்சுறுத்தலை உண்டாக்கி வருகிறது. இப்போது பாகிஸ்தான் ஆப்கான் மீது நேரடியா கவே நாசகார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. *

## நிக்கரகுவாவில் சி. ஐ. ஏ.


நிக்கரகுவாவில் உள்ள ''சாண்டினிஸ்டா'' புரட்சிகர அர சைக் குழி பறிக்க மூன்று ஆண்டுகளாக ஏகாதிபத்திய அமெரிக்கா பிரகடனம் செய்யாத நாசத்தனமான போரை நடத்தி வருகிறது.

ஏகாதிபத்திய கைக்கூலியான ஹோண்டுராஸ் நாட்டில் இருந்து அமெரிக்கா தனது குழிபறிப்பு வேலைகளைத் தொடர் கிறது.

நிகரகுவா அரசை எதிர்க்கும் எதிர்ப்புரட்சிக் கும்பலுக்கு உதவியாக ஹோண்டுராஸ் நாட்டிலிருந்து சி. ஐ. ஏ. உளவாளி கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் அண்மையில் விமானத்தில் பறந்து கொண்டிருந்த போது கண்டுபிடிக்கப்பட்டுக் கீழே இறக்கப்பட்டனர். இதில் இரண்டு அமெரிக்கர்கள் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் அமெரிக்காவின் ஊடுருவலும், எதிர்ப்புரட்சி கும்பலுக்கு அது உதவி அளிப்பதும் அம்பலமாகியுள்ளன.

நிகரகுவாவின் புரட்சிகர அரசும், வீரமிக்க மக்களும் தமது புரட்சியின் ஆதாயங்களைக் காக்க உறுதியோடு ஏகாதி பத்தியத்தை எதிர்த்துப் போராடுகின்றனர். O



# ★ கட்சியைப் புரட்சிகரக் கட்சியாக்குதல்

''போல்சுவிக்குகளாக ஆக்க சில அடிப்படை யான நிலைகளையாவது உருவாக்க வேண்டும். அவையின்றிக் கம்யூனிஸ்ட் கட்சிகளை போல்சுவிக் கட்சிகளாக (புரட்சிகரமானதாக) ஆக்குவது என் பது சாத்தியமானதல்ல.

1) கட்சியானது சமூக ஜன நாயகக் கட்சி செய்வது போல், நாடாளு மன்றத் தேர்தல் இயந்திரத்தின் தொங்கு சதையாக தன்னைக் கருதி கொள்ளக் கூடாது. அனார்கோ-சிண்டிகலிஸ் டுக்கள் சில சமயம் வற்புறுத்துவது போல் தொழிற்சங்கங்களின் தயவில் உள்ள துணைக் கருவி என்றும் கருதக் கூடாது. நேர்மாறாக **தொழிற் சங்கங்களிலிருந்து நாடாளுமன்றத் திலுள்ள கட்சிக் குழுவரை இதர எல்லா பாட்டாளி வர்க்க அமைப்புகளையும் வழி நடத்தும் வேலையைச் செய்வதற்கான, பாட்டாளி வர்க்கத்தின் மிக உயர்ந்த வர்க்க அமைப்பாகக் கருத வேண்டும்.**

2) கட்சி - விசேசமாக அதன் தலைவர்கள் புரட்சிகரமான நடைமுறையுடன் பிரிக்க முடியாமல் இணைக்கப் பட்டுள்ள புரட்சிகரமான மார்க்சியத் தத்துவத்தில் முழுமையான பாண் டித்தியம் பெற்றிருக்க வேண்டும்.

3) பழகிப்போன சூத்திரங்களையும், வரலாற்று உவமை களையும் ஆதாரமாகக் கொண்டு, கட்சியானது முழக்கங் களையும், உத்தரவுகளையும் தயாரிக்கக்கூடாது. புரட்சி இயக்கத்தின் ஸ்தூலமான தேசிய, சர்வதேசிய நிலைகளை உன்னிப்பாக ஆராய்ந்து, இவற்றைத் தயாரிக்க வேண்டும். எல்லா நாடுகளது புரட்சி இயக்கத்தின் அனுபவங்களையும் தவறாமல் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



4) மக்களது புரட்சிகரப் போராட்டம் என்னும் உரை கல்லில் இம் முழக்கங்களும், உத்தரவுகளும், சரியானவை தானா என்று கட்சி சோதித்துப் பார்க்க வேண்டும்.

5) கட்சியின் பணிகள் முழுவதும்—குறிப்பாகச் சமூக ஜனநாயகப் பாரம்பரியங்கள் இன்னும் ஒழிக்கப்படாமல் இருக்கும்போது—புதிய புரட்சிகரமான வழியில் புரனமைக்கப் படவேண்டும். கட்சி முன்வைக்கும் ஒவ்வொரு செயலும் இயல்பாகவே மக்களைப் புரட்சிகரமாக்கத் துணைபுரிய வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் விரிவான பகுதிகளை, புரட்சிகர ஆர்வத்தில் போதித்துப் பயிற்றுவிக்கத் துணைபுரிய வேண்டும்.

6) தனது வேலையில் கட்சி, **கோட்பாட்டைப் பற்றி நிற்பது என்பதில் மிகவும் கூடுதலான கறார் தன்மையுடன்** (இதனை செக்டேரியனிசத்துடன் குழப்பிக்கொள்ள வேண்டாம) மக்களுடன் அதிகபட்சமான தொடர்புகள், பிணைப்புகள் ஏற்படுத்திக் கொள்வதை (இதனை மக்களுக்கு வால்பிடிப்பது என்பதுடன் குழம்பிக் கொள்ளக் கூடாது) இணைத்துக் கொள்ளும் திறன் படைத்தாக இருக்க வேண்டும். இது இல்லாமல் கட்சியால் மக்களுக்குப் போதிக்கவும் முடியாது- மக்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும் முடியாது. மக்களுக்குத் தலைமை தாங்கி, தனது தரத்துக்கு மககளை உயர்த்தவும் முடியாது. மக்களது குரலுக்குக் காது கொடுத்து, அவர்களது அவசரத் தேவைகளை முன்கூட்டியே உணரவும் முடியாது.

7) தனது வேலைகளில கட்சி, சமரசமற்ற புரட்சிகர ஆர்வத்தை (இதனைப் புரட்சிகரத் துணிச்சல்வாதத்துடன் குழப்பிக் கொள்ளக்கூடாது) அதிகபட்ச நீக்குப் போக்குடனும் சாகசம் செய்யும் ஆற்றலுடன் (இதனைச் சந்தர்ப்பவாதத் துடன் குழப்பிக் கொள்ளக்கூடாது) இணைத்துக் கொள்ள, திறமை கொண்டதாக இருக்க வேண்டும். இவையில்லாமல் கட்சியானது சகல போர் வடிவங்களையும், அமைப்பு வடிவங் களையும் ஆளத்திறமை படைத்ததாக, பாட்டாளி வர்க்கத்தின் அன்றாட நலன்களைப் பட்டாளி வர்க்கப் புரட்சியின் அடிப் படையான நலன்களுடன் இணைக்கத் திறமை படைத்ததாக, தனது வேலையில் சட்டரீதியான வேலையுடன், சட்ட விரோதமான வேலையை இணைக்கும் திறமை படைத்ததாக ஆகமுடியாது.



8) கட்சி தனது தவறுகளை மூடி மறைக்கக்கூடாது. விமர் சனத்தைக் கண்டு அஞ்சக்கூடாது. தனது தவறுகளிலிருந்து கற்றுணர்ந்து தனது ஊழியர்களுக்குப் போதனையளித்து அவர்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

9) புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் அபிலாசை களுக்கு உண்மையாகவே குரல் கொடுப்பது என்னும் இலட்சி யத்துக்குப் போதுமான விசுவாசம் கொண்ட முன்னணி வீரர் களிலிருந்து ஆகச் சிறந்த நபர்களைப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு உண்மையான தலைவர்களாக ஆவதற்கான போதுமான அனுபவம் கொண்டவர்களை—லெனினிச யுத்த தந்திரத்தையும், செயல் தந்திரத்தையும் அமுல் செய்ய ஆற்றல் உளளவர்களை—தனது பிரதான தலைமைக் குழுவுக்குள் திரட்டிக் கொள்ள கட்சிக்கு இயல வேண்டும்.

10) கட்சி தனது அமைப்புக்களின் சமூக சேர்மானத்தைத் (வர்க்க சேர்மானத்தை) திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய வேண்டும். அதிகபட்ச ஒருமைப்பாட்டை அடைவதற்கு, ஊறுவிளைவிக்கும் சந்தர்பவாத நபர்களை ஒதுக்கிவிட வேண்டும்.

**11) தத்துவார்த்த ஒருமைப்பாடு, இயக்கத்தின் இலக்குகள் குறித்த தெளிவு, நடைமுறைச் செயலில் ஒற்றுமை, கட்சியின் விரிவான அணிகள் மத்தியில் கட்சியின் கடமைகள் குறித்த போதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உருக்குப் போன்ற பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டைக் கட்சி பெற்றாக வேண்டும்.**

12) தனது முடிவுகளும், கட்டளைகளும் நிறைவேறு வதைத் திட்டமிட்ட முறையில் கட்சி **கண்காணித்து** வர வேண்டும். இல்லையெனில் இந்த உத்தரவுகளும், முடிவுகளும் வெற்று வாக்குறுதிகளாக ஆகிவிடும் அபாயம் ஏற்படும் இதன் மூலம் கட்சி விரிவான பட்டாளி மக்களது நம்பிக்கையை இழந்துவிடும்.

இவையும், இவைபோன்ற இதர நிலைகளும் இல்லாமல் கட்சியைப் புரட்சிகரமான கட்சியாக ஆக்குதல் என்பது வெற்று முழக்கமாகவே இருக்கமுடியும்.

**★தோழர் ஜே. வி. ஸ்டாலின்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழ விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு

## [TELO, EROS, EPRLF]

சிறீலங்காவின் மதத் தலைவர்களைக் கொண்ட தூதுக் குழுவொன்று இந்தியாவில் இருப்பதாகக் கூறப்படும் ஈழ விடுதலை இயக்கங்களைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக அக்டோபர் மாதம் 14ம் திகதி சென்னை வருவதாகப் பத்திரிகை குறிப்புகள் கூறுகின்றன.

கடந்த ஒரு வருட காலமாகப் பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட மிதவாதப் போக்குடைய தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சு வார்த்தை நடத்தியே ஓர் தெளிவான அரசியல் தீர்வுக்கு வரமுடியாமல் சிறீலங்கா அரசு காலத்தைக் கடத்தி வருகின்றது. இந்த நிலையில் ஆயுதப் போராட்டமே எமது விடுதலைக்கு ஒரேவழி, ஈழமே முடிந்த முடிவு என்று திடமாக நம்பி அதற்கான போராட்டங்களையும் நடத்திவரும் விடுதலை இயக்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த இவர்கள் வருகின்றார்கள் என்றால், இது அவர்களது குள்ளநரித் தந்திரத்தின் ஒருபகுதியே தவிர உண்மையான தீர்வை விரும்பி அல்ல.

இது சிறீலங்கா அரசின் அங்கீகாரம் பெற்ற தூதுக் குழுவும் அல்ல. இவர்கள் விடுதலை இயக்கங்களுடன் பேசுவதால் எந்தவித அரசியல் தீர்வும் ஏற்படப் போவதில்லை.

இவற்றுக்கு மேலால் ஈழ விடுதலை பற்றிய பிரச்சாரத்தை மேற்கொள்ளும் சிலர்தான் எமது இயக்கங்கள் சார்பில் இங்குள்ளார்களே தவிர எமது தலைமைப் பீடமன்று. எனவே இங்கு பேச்சுவார்த்தைகள் நடத்த வருவதில் எதுவித பயனும் இல்லை.

ஆகவே, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகளைச் சார்ந்த நாம், இவர்களது வருகையை வன்மையாகக் கண்டிப்பதுடன் எமது பிரதிநிதிகள் யாரும் இவர்களைச் சந்திக்க மாட்டார்கள் என்றும் தெளிவு படுத்த விரும்புகின்றோம்.

இவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் இலங்கையிலுள்ள மதத்தலைவர்களை ஒன்றுகூட்டி, தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டு வரும் சிங்கள பௌத்த மதவெறியர்களின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதேயாகும். ★

# கொலைக்கும்பலும் அதிரடிப்படையும்

தா.பாண்டியன்

சிறீலங்காவைத் தனது நவகாலனித்துவப் பிடிக்குள் கொண்டுவந்து தனதுஆக்கிரமிப்பு இராணுவ வெறிக்குத் தளம் காண அமெரிக்க ஏகாதிபத்தியம் முனைந்து செயல் படுகிறது. சர்வதேச அரங்கில் தனது நண்பர்களை இனம் கண்டு பிரிட்டிஷ், தென்னாப்பிரிக்கா, இஸ்ரேல், சீனா போன்ற நாடுகளையும் சிறீலங்கா, பாசிஸ்டுக்கள் துணைக்கழைத்துள்ளனர். இலங்கைத்தீவில் ஏகாதிபத்திய அமெரிக்காவினதும், அதன் ''நேட்டோ'' இராணுவக் கூட்டாளிகளதும் ஊடுருவல்இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இந்து மாக்கடலை யுத்த சூனியப் பிராந்தியம் ஆக்கும் கூட்டுச் சேரா நாடுகளது கோரிக்கைக்கும் ஏகாதிபத்திய நுழைவு வேட்டு வைக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலத் துணைச் செயலாளர் **தோழர் தா. பாண்டியன்** அவர்கள் ஜனசக்தி நாளிதழில் எழுதியதை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

★ ★ ★

சிறீலங்கா அரசின் அழைப்பின் பேரில், இஸ்ரேலிய ரகசிய அதிரடிப் படையான ''மொசாத்'' இலங்கை ராணுவ வீரர்களுக்குப் பயிற்சி கொடுக்க வந்துள்ள செய்தியைப் படித்திருப்பீர்கள்.

இஸ்ரேலினுடைய இந்த அதிரடிப்படை கொலை கொள்ளை, திடீர்த் தாக்குதல், நாசவேலை, கோட்டைக்குள் குத்து வெட்டுக்கு ஏற்பாடு செய்தல் போன்ற பல திருவிளையாடல்களில் பயிற்சி பெற்றது.

40 லட்சம் யூதமக்களைக் கொண்ட இஸ்ரேல், பலகோடி அரபு மக்களைக் கொண்ட எட்டு நாடுகளுக்கும் நடுவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைந்துள்ளது. நடுவில் அகப்பட்டுக் கொண்ட அப்பாவி போல தோன்றினாலும் பாறையை உடைக்கத் திணிக்கப்பட்ட உளி மாதிரி அது புகுந்துள்ளது.

அது தன் நாட்டை விட அதிக மக்கள் தொகை, நிலப் பரப்புடைய எகிப்த்தைத் தாக்கி நாசப்படுத்தியதை உலகு அறியும்.

ஈராக் கட்டி முடித்த அணுமின் நிலையத்தைக் குண்டு போட்டு அழித்துவிட்டு உலகக் கண்டனத்தையும் பொருட்படுத்தாது, ஆணவத்துடன், அப்படித்தான் செய்வேன் என்று கொக்கரித்த கதையையும் உலகறியும்.

அண்டை நாடான லெபனானுக்குள் நுழைந்து அது செய்து வரும் அட்டகாசங்களை, ஐக்கிய நாடுகள் சபையே கண்டித்தும் பயனில்லை.

இஸ்ரேலிலுள்ள யூதஅரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தத்துப் பிள்ளை.


இரண்டாம் உலகப்போர் முடிந்த நிலையில் பாலஸ்தீனியர்கள் வாழ்ந்து வந்த அதேநாட்டில், உலகின் பல பகுதிகளில் வாழ்ந்து வந்த யூதர்களைக் கொண்டுபோய் அமெரிக்க ஏகாதிபத்தியம் குடியேற்றியது.

மகாத்மா காந்தியடிகள் யூத மக்களுக்கு ஒருநாடு தர வேண்டும் என்ற உண்மையான நோக்கம் அமெரிக்காவுக்கு இருந்தால், அமெரிக்கக் கண்டத்தில் ஏதாவது ஒரு மாநிலத்தை (மக்கள் இல்லாத அல்லது குறைவாக உள்ள இடத்தில்) ஒதுக்குமாறு வேண்டினார். மாறாகப் பாலஸ்தீனிய மக்கள் வாழும் நாட்டில் அதுவும் வளமற்ற பூமியில் இவர்ளையும் கொண்டுபோய்க் குடியேற்றினால் பகைமை வளரும். சண்டை தொடரும். மீண்டும் யூதமக்கள் பலியாகக் கூடும். எனவே பாலஸ்த்தீனத்தில் குடியேற்றாதீர்கள் என வேண்டினார்.

உபதேசங்களைக் கேட்குமா ஏகாதிபத்தியம்! பாலஸ்தீன மக்கள் தலையிலேயே கொண்டுபோய் யூதமக்களைக்குடியேற்றியது. விளைவு, புகுந்தவர்கள் இருந்தவர்களைத் துரத்தினர். கொன்றும் அழித்தனர். யூதர்கள் குடியேறப்போன நேரத்தில் 25 லட்சம் பாலஸ்தீனியர்கள் அங்கு இருந்தனர். இப்பொழுது 3 லட்சம் பேர்தான் உள்ளனர். 20 லட்சமாகக் குடியேறிய யூதர்கள் 41 லட்சமாக வளர்ந்துள்ளனர்.



எனவே இஸ்ரேல் எனும் நாடே பாலஸ்தீனியர்களின் கல்லறை மீது எழுப்பப்பட்ட பாவச் சின்னந்தான்.



**அரபு நாடுகளில் உள்ள எண்ணெய் வளத்தைச் சுரண்ட அரபு நாடுகளை அச்சுறுத்த காவலுக்காகஇஸ்ரேலை உண்டாக்கியது அமெரிக்க ஏகாதிபத்தியம்.**

அதற்க்காக நாசகர ஆயுதங்கள், பண உதவி, பின்பலம் என அமெரிக்க ஏகாதிபத்தியம் சகல காரியங்களையும் செய்கிறது.

இத்தகைய சதி வேலைகளைச் செய்து பழகிவிட்ட இஸ்ரேலின் அதிரடிப் படை இப்பொழுது இலங்கைக்கு வந்துள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆசியாவில் அதற்கு எடுபிடி காவலாளாக, பார்மோசா, தென்கொரியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் போன்ற நாடுகளை வைத்துள்ளது. இப்பொழுது இலங்கையையும் ஆக்கிவிட்டது.

இலங்கைக்கு இராணுவப் பயிற்சி கொடுக்க ''மொசாத்'' வந்துள்ளது, இது தன் சதிவேலைகளைத் தமிழ் நாட்டிலும் செய்யும்.

இலங்கையில் அதிரடிப்படைப் பயிற்சி தரப்படும். தமிழ் நாட்டுக்குள் சதி, பிளவு வேலைகள் நடக்கும்.

**''மொசாத்''** என்ற இந்த அதிரடிப்படை அமெரிக்கத் தூதுவராலயத்தில் ஒருபகுதியில் தன் தலைமையகத்தை வைத்துக் கொண்டுள்ளது.

இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிக்காமலே இருந்த இலங்கை இப்பொழுது இராணுவ ஒத்துழைப்புக்கே தயாராகி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டது, இதுவும் போதாதென்று அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனத்தின் உதவியும் வேண்டும் எனக் கேட்டுள்ளதாம் இலங்கை.

**இஸ்ரேலின், மொசாத் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சி.ஐ.ஏ., இங்கிலாந்தின கொலைக்கும்பல்** ஆகியவற்றின் உதவியுடன் ஈழத்துத் தமிழரை அடக்க, ஒடுக்க, ஒழிக்க சிறீலங்கா புறப்பட்டுள்ளது.

இது வெறும் சிங்கள, தமிழ் இனச் சண்டை மட்டுமல்ல; இனப்பிரிவைப் பயன்படுத்தி, அதையே வெறியாக்கி, அதனால் சண்டையுண்டாக்கி, அவ் வேளையில் நுழைவதே ஏகாதிபத்தியத்தின் கலை.

சிறீலங்காவில் இந்தப் பூதங்கள் நுழைவது ஏன்? இந்தியாவிலிருந்து டீகோகார்சியா 640 கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்தியாவுக்கு நெருக்கமாக இலங்கை தேவைப்படுகிறது.

ஏவு கணைகளை அமெரிக்காவிலிருந்து வெடித்தாலும், சோவியத் யூனியன் மீதுவிழும் என்றாலும், 4 நிமிடங்களில் தாக்கிட, சோவியத் எல்லையோரம் கொண்டுபோய்க் குவிப்பதைப் போல், நம் நாட்டைச் சுற்றியும், உள்ளும், தளம் காண களம் அமைக்கிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம்.

ஈழத்துத் தமிழருக்காக அனுதாபம் காட்டுவோர் அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ற எதிரியை இனங்கண்டு எதிர்க்கத் தயாரானால் தான் இலங்கை மக்களும், இந்திய மக்களும் தப்பமுடியும்.

***சிறீலங்கா தன் நண்பர்களை அடையாளம் கண்டு அழைத்துள்ளது. நாம் மக்களுக்கு நம் நண்பனையும், நம் எதிரியையும், அடையாளம் காட்டவேண்டாமா? இனியும் வீணாக்கக் காலம் இடம் தராது!***

***ஏகாதிபத்தியத்தை முறியடிக்க முடியும், நம்நாட்டு மக்கள் திரண்டெழுந்தால்... நமது நம்பிக்கைக்குரிய நண்பன் சோவியத் யூனியனும், சோஷலிச முகாமும் என்பதைத் தெரிந்து கொண்டால்...***

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்டோபர் புரட்சியின் அடிச்சுவட்டில்...




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்